# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No. 398/2023

## 11.11.2025

## D.W.1- ஆயம்மாள்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம், எதிர்வழக்குரைக்கு நான் தான் வழக்கறிஞருக்கு விவரம் சொல்லி தாக்கல் செய்யப்பட்டது. வாதி, எனது மருமகன் செந்தில்குமார் மூலம் பழக்கம் என்றால் சரிதான். எனது மருமகன் மற்றும் வாதியின் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்தபோது பழக்கம் என்றால் சரிதான். நான், எனது மகள், எனது மருமகன் ஆகியோர்கள் பணம் தேவை என்றால் வாதியிடம் பெற்றுக்கொள்வோம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். பதிலறிவிப்பு, எதிர்வழக்குரை ஆகியவற்றில் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 சலான் ரசீதுகள் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சலான்கள் 2021, 2022 காலத்திற்கான சலான்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் முதல் சாட்சியாக எனது மருமகன் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதியும், அவரது கணவரும் தகாத வார்த்தைகளால் திட்டியதாக கூறவில்லை. பொதுவாக வட்டிக்கு பணம் வாங்கினால் மாதந்தோறும் வட்டி செலுத்துவார்கள் என்றால் சரிதான். பொதுவாக, ரூ.2 லட்சம் கடன் பெற்றிருந்தால் ரு.1 வட்டி என்றால் ரூ.2000மும், ரூ.2 வட்டி என்றால் ரூ.4000மும், ரூ.3 வட்டி என்றால் ரூ.6000மும் செலுத்துவார்கள் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் ரூ.2 லட்சம் கடன் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 சலான்கள் மூலம் ரூ.23,000, ரூ.1,00,000, ரூ.15,000, ரூ.15,000, ரூ.3,000 மற்றும் ரூ.49,000 செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1ல் 26.10.2021ம் தேதி ரூ.15,000 செலுத்தியதாகவும், 27.10.2021ம் தேதி ரூ.23,000 செலுத்தியதாகவும் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக, வட்டிக்கு பணம் வாங்கினால் அடுத்தடுத்த நாட்களில் வட்டி செலுத்த

மாட்டார்கள் என்றால் சரியல்ல. எனது மகள் தற்போது பலசரக்கு கடையில் வேலை பார்த்து வருகிறார். காலை 9.00 மணிக்கு வேலைக்கு சென்று இரவு 8.00 மணிக்கு வீட்டிற்கு வருவார். பி.வா.சா.ஆ.1 ஆவணம் எனது மகள், மருமகன் அவர்கள் வாதியிடம் பெற்ற கடனுக்காக எனது மகள் வேலைக்கு சென்றுவிடுவதால் வங்கியில் செலுத்த முடியாத காரணத்தினால் எனது மகள் கொடுத்து நான் செலுத்திய சலான்கள் என்றால் சரியல்ல. வாதி எனது மகள் மற்றும் எனது மருமகன் மீது எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகள் கொடுத்த சலான்கள் என்பதால் தான் மேற்படி சலான்கள் பற்றி எதிர்வழக்குரையில் சொல்லாமல் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது வாதியை ஏமாற்றுவதற்கு என்றால் சரியல்ல. எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இரண்டாவது மகன் பெயர் தங்கம் என்றால் சரிதான். அவரின் காதல் திருமணத்தை நான் தான் நடத்தி வைத்தேன் என்றால் சரிதான். வாதியிடம் இரண்டாவது மகனின் திருமணத்தை நடத்த கடன் பெற்றேன் என்றால் சரிதான். நான் வாதியிடம் பெற்ற கடனுக்கான பணத்தை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எதிர்வழக்குரையில் அ.வ.405/2023 வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.11 16:54:08 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.